## பசுபிக் பங்காண்மை 2018

### ஆரம்ப உரை

ரொபர்ட் ஹில்ட்டன்
பிரதித் தூதுவர்
அமெரிக்கத் தூதரகம், கொழும்பு, இலங்கை
ஏப்ரல் 25, 2018

அட்மிரல் ஆட்டிகல, அட்மிரல் டி சில்வா, கப்டன் ப்ரெட்ஸ், சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தர்கள், பங்காண்மையாளர்கள் மற்றும் தோழர்கள் அனைவருக்கும் மாலை வணக்கம். யு.எஸ்.என்.எஸ். மேர்சியிலிருந்து (USNS Mercy) எம்மோடு இணைந்துகொள்ளும் உங்கள் அனைவரையும் இலங்கை மற்றும் மாலைதீவுக்குமான அமெரிக்கத் தூதுவர் அத்துல் கெஷாப் மற்றும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக ஆளணியினர் அனைவர் சார்பிலும் இலங்கைக்கு வரவேற்கின்றேன். நீங்கள் இங்கே இருப்பதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். நீங்கள் இலங்கையில் இருக்கும் காலம் பயனுள்ளதாகவும் நினைவுகூரத்தக்கதாகவும் இருக்கும். இலங்கையில் இரண்டாவது பசுபிக் பங்காண்மையின் (Pacific Partnership) ஆரம்பத்தில் உங்களுடன் இணைவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். யு.எஸ்.என்.எஸ். ∴போல் றிவர் (USNS Fall River) தெற்கு அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வந்தபோதான 2017 பசுபிக் பங்காண்மையின் குறிப்பிடத்தக்க வெற்றியைத் தொடர்ந்து இந்த ஈடுபாடானது முன்னையதைக் காட்டிலும் மிகவும் வலுவானதாகவும் விரிவானதாகவும் இருக்குமென நான் நம்புகின்றேன். 2016 இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பசுபிக் ஏஞ்ஜலின் அடைந்த சாதிப்புகளின் அடிப்படையில் நீங்களும் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றீர்கள். யு.எஸ். பசுபிக் கடற்படை தொகுதியினருக்கு இலங்கைக் கடற்படையினருக்கும் யு.எஸ்.என்.எஸ். மேர்சி பணியாட்தொகுதியினருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஏனென்றால், அவர்கள் இல்லாமல் இந்தச் செயற்பாடு சாத்தியப்பட்டிருக்காது.

2018ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரத்தினதும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளினதும் 70 ஆண்டு நிறைவைக் குறிக்கின்றது. எவ்வாறிருப்பினும், இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளானது அதற்கப்பாலும் நியூ இங்கிலாந்து திமிங்கல வேட்டைக் கப்பல்கள் (whalers) விநியோகத்துக்காக காலி துறைமுகத்துக்கு வந்த அமெரிக்க குடியரசின் ஆரம்ப நாட்கள் மற்றும் மார்க் ட்வேய்ன் மற்றும் அமெரிக்க மிஷனரிகள் என பல்வேறுபட்ட பயணிகள் சிலோனுக்கு வந்த 19 ஆம் நூற்றாண்டு வரை பின்னோக்கி செல்கிறது. அந்த பயணிகளில் சிலர் தங்குவதற்காகவும் சிலர் பயணமாகவும் வருகை தந்திருந்தனர். அவர்கள் எல்லோரும் எமது நாடுகளுக்கிடையிலான நட்புறவில் தமது அடையாளத்தை விட்டுச் சென்றுள்ளனர். பசுபிக் பங்காண்மையானது இந்தக் கதையின் புதிய அத்தியாயத்தை எழுதும்.

கடந்த ஆண்டின் செயற்பாட்டின் மீது கட்டமைக்கப்பட்ட இந்த ஆண்டின் பங்காண்மையானது நான்கு முக்கிய முயற்சி வழிகளில் நிகழ்ச்சிகளை அம்சப்படுத்தும். அவையாவன, பொறியியல், மருத்துவம், மனிதநேய உதவி, அனர்த்த நிவாரணம் மற்றும் சனசமூக உறவுகள் என்பனவாகும். இந்த நிகழ்வுகளின் தாக்கம் முக்கியமானது. இவை எண்ணங்கள் மற்றும் சிறந்த பழக்கங்களின் பரிமாற்றச் செயற்பாட்டம்சமாக மாத்திரம் இராது. ஆனால், மிக முக்கியமாக இவைகள் அதன் பங்குபற்றுநர்களுக்கிடையிலான தொழில்வாண்மை மற்றும் தனிப்பட்ட உறவுகளின் விருத்தியை வளரச் செய்யும். எங்களுடைய கடற்படையினர் பாடசாலைகளையும் சிகிச்சை நிலையங்களையும் கட்டி நூற்றுக்கணக்கான இலங்கையர்களுக்கு மருத்துவப் பராமரிப்பை வழங்குகிறார்கள். ஆனால், மிகவும் முக்கியமாக அவர்கள் இலங்கை தொழில்வாண்மையினருடன் தமது நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்கிறார்கள். இதன்மூலம் எதிர்காலத்தில் பல மக்கள் நன்மையடைய முடியும். தேசங்களுக்கு இடையிலான உண்மையான பங்காண்மையின் பாறையாகவும் பல்தரப்பு ஒத்துழைப்பின் அடித்தளமாகவுமே அவர்கள் உறவுமுறைகளைக் கட்டியெழுப்புகின்றார்கள்.

அடுத்த இரு வாரங்களில் இடம்பெறப்போகின்ற 36 திட்டமிடப்பட்ட நிகழ்வுகளின் பாகமாக பசுபிக் பங்காண்மையானது அனர்த்த பதிற் செயற்பாடு மனிதநேய நிவாரணத்தில் கவனஞ்செலுத்திய ஒரு உச்ச பயிற்சி நிகழ்வுடன் அதன் உச்சத்தை அடையும். எமது பிரித்தானிய, அவுஸ்திரேலிய, கனேடிய, ஜப்பானிய, பேருவியன் பங்காண்மையாளர்களின் பங்குபற்றுகையானது உண்மையில் இதனை ஒரு சர்வதேச விவகாரமாக்குகிறது. செயல்விளைவுடைய அனர்த்தப் பதிற்செயற்பாடானது ஒரு ஒருமுகப்பட்ட பல்தேசிய முயற்சியாகவுள்ளது. அது உரிய இராணுவங்களுக்கிடையிலான இணைந்து செயற்படக்கூடிய தன்மையை அதிகரிப்பதுடன் இந்தச் செயற்பாடானது பிராந்தியத்தில் எமது பகிரப்பட்ட அர்ப்பணிப்பை எடுத்து விளக்குவதுடன் நாம் இதன் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டியதை உறுதிப்படுத்துகின்றது.

பசுபிக் பங்காண்மையானது ஒரு நல்லிணக்கப்பட்ட, வளமான, பாதுகாப்பான இலங்கைக்கான அமெரிக்கவின் ஆதரவுக்கான ஒரு விருப்ப சான்றாகும். இதனைவிட எமது நாடுகளுக்கிடையிலான பங்காண்மையின் பிணைப்புகளை பேணுவதற்கும் பலப்படுத்துவதற்குமான எமது அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பும் இதுவாகும். மீண்டும் வரவேற்கின்றோம்! வாழ்த்துக்கள்! அடுத்த பத்துத் தினங்களில் நீங்கள் செய்யவிருப்பவற்றக்காக நன்றி கூறுகின்றோம். நன்றி.